கண்காணிப்புப் பொறியாளர்/ இயக்குநர் அலுவலகம், பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி —620 020.

முன்னிலை: பொறி.ச.திலகவதி, பி.இ., கண்காணிப்புப்பொறியாளர்/இயக்குநர்,பொபது.

செயல்முறை ஆணை எண்.47ஏம்./ கோ.6/ (551) 2021/ நாள்:25-10-2021.

பொருள்: பணியமைப்பு - த.நா.அமைச்சுப்பணித்தொகுதி - காலஞ்சென்ற அரசுஊழியர் திரு. ஏ.கண்ணன், தரம்-2 மின் கம்பியாளரின் மகன் திரு.கே. சுகேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் - பணிவரன்முறைப்படுத்த — ஆணை வழங்கப்படுகின்றது

பார்வை:
1) முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது. சென்னை அவர்களின் செ.மு.ஆ. எண்.எஸ்.3(4)/ 44431/ 2011/ நாள்: 27.07.2018.
2) தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர், பொ.ப.து. நீர்ஆய்வு நிறுவனம் நீரியில் (ம) தரக்கட்டுபாடு, நீ.ஆ.து., தரமணி சென்னை-113 அவர்களின் செ.மு.ஆ. எண்.அ1/ 453/ 2018-1/ நாள்: 23.08.2018
3) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ)த்துறை நாள்: 23.01.2020.
4) முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது. சென்னை அவர்களின் செ.மு.ஆ. எண்.எஸ்.3(3)/ 21005/ 2020/ நாள்:12.03.2020.
5) செயற்பொறியாளர், பொபது. தரக்கட்டுபாடு கோட்டம், விழுப்புரம் அவர்களின் செ.மு.ஆ. எண்.நிஎ1/ 130-5/ 2020/ நாள்: 30.05.2020.
6) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களின் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 26.02.2021
7)துணை இயக்குநர்/செயற்பொறியாளர், பொ.ப.ப.ப.நிலையம், சென்னை மண்டலம் சென்னை அவர்களின் கடித எண்.199/கோ.04/2020/நாள்:17.7.2021
8) இவ்வலுவலக கடித எண்.114முதபொ/கோ.07/(353)/ 2021/நாள்:15.09.2021
9)முதன்மை தலைமைப்பொறியாளர் (க) மற்றும் தலைமைப் பொறியாளர் (க) பொபது. சென்னை மண்டலம், சென்னை அவர்களின் கடித எண்.நி3(3)/ 013720/ 2021/ நாள்: 04.10.2021.

******

பார்வை எண்.3ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை எண்.6ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையிலான காலத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு கீழ்காணும் வழிமுறை (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படவேண்டும்.

பார்வை எண்.6ன்படி கருணையடிப்படையில் பணி அமர்த்தப்பட்ட பணியாளரின் பணியினை வரன்முறை செய்வதற்கான அதிகாரம் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின்

(Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு (One level higher than the appointing authority) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் பணிவரன்முறை தொடர்பான கருத்துரு பார்வை எண்.8ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 23.08.2018 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசிடமிருந்து ஆணை பெற்று வழங்குமாறு முதன்மை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்கு கருத்துரு பணிந்தனுப்பப்பட்டது.

அக்கருத்துரு பார்வை எண்.6ல் காணும் அரசு கடிதங்களில் தெரிவித்துள்ளபடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு, பார்வை எண்.9ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடிதத்தின் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டது.

முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது. அவர்களது பார்வை எண்.(1)-ல் காணும் செயல்முறையின்படி திரு.ஏ.கண்ணன், மின்கம்பியாளர் பணியில் இருக்கும்பொழுதே 04.04.2009 அன்று காலமானதையொட்டி அவரது மகன் திரு.கே.சுகேஷ்க்கு பார்வை.எண்.1ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயல்முறையின்படி கருணையின் அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், பொதுப்பணித்துறை, நீர் ஆய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுபாடு, நீ.ஆ.து. சென்னை கட்டுப்பாட்டிலுள்ள செயற்பொறியாளர், பொபது-நீஆது. கட்டட தரக்கட்டுபாடு கோட்டம், சென்னை-5ல் 23.08.2018 பிப. பணியில் சேர்ந்து பின்னர் இவ்வியக்குநர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை மண்டல பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு பணிமாறுதல் செய்யப்பட்டு 01.06.2020 முப. முதல் இவ்வலுவலகத்தின் கட்டுப்பாட்டினில் இளநிலை உதவியாளராக தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

கருணை நியமனம் பெற்றவர்குறித்த விபரங்கள்:

| | |
|---|---|
| 01. கருணையின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர் பெயர் | கே.சுகேஷ் |
| 02. நியமனம் செய்யப்பட்ட பதவி | இளநிலை உதவியாளர் |
| 03. தகப்பனார் பெயர் | ஏ.கண்ணன் |
| 04. பிறந்த தேதி | 22.08.1983 |
| 05. அரசு அலுவலரின் தந்தை இறப்பு நாள் அன்று இவரது வயது | இறந்த நாள்:04.04.2009<br>அன்று இவரது வயது: 25வ - 07மா - 14நாள் |
| 06. அதிக பட்ச கல்வித்தகுதி | 12-ம் வகுப்பு தேர்ச்சி |
| 07. வகுப்பு | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு |

பணியில் இருக்கும்பொழுது இறந்த அரசு அலுவலர் குறித்த விபரங்கள்

| | |
|---|---|
| 01. பெயர் | ஏ.கண்ணன் |
| 02. வகித்த பதவி | மின் கம்பியாளர் தரம்-2 |

| | |
|---|---|
| 03. பிறந்த நாள் | 06.06.1956 |
| 04. இறந்த நாள் | 04.04.2009 |
| 05. பணியில்தொடர்ந்து பணியாற்றியிருந்தால் சாதராணமாக ஓய்வு பெற வேண்டிய நாள் | 30.06.2014 |
| 06. சிகிச்சை பலனின்றி இறந்தபொழுது பணிபுரிந்த அலுவலகம் | மின் உபகோட்டம் எண்.5, பொபது. சென்னை-600005 |

குடும்பத்தின் வறிய சூழ்நிலை குறித்து:

04.04.2009 அன்று பணியில் இருக்கும்பொழுது இறந்த திரு.ஏ.கண்ணன், மின் கம்பியாளர் தரம்-1 குடும்ப வறிய சூழ்நிலை குறித்து சென்னை-78, மாம்பலம் கிண்டி தாலுக்கா வட்டாட்சியரால் 30.03.2010 அன்று வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த சான்றிதழின்படி அவரது குடும்பத்திற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஏதுமில்லை என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியமாக ரூ.4000/- மட்டும் பெறப்படுகின்றது. அக்குடும்பம் வறிய சூழ்நிலையில் உள்ளது என சான்றுரைக்கப் பட்டுள்ளது.

திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் கல்வித்தகுதி:

இளநிலை உதவியாளர் பதவிக்கு குறைந்த பட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் பனிரெண்டாம் வகுப்பு (பிளஸ் 2) தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி பணி விதி 14/2016-ல் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (த.நா.அ.சட்டம் 2016) விதி 20(1)-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கல்வித் தகுதியைப் பெற்றுள்ளார். அவரது எஸ்.எஸ்.எல்.சி. சான்று (எண்கள்.A498072 பதிவு எண்.526412 & A715382 பதிவு எண்.780748) மற்றும் பனிரெண்டாம் வகுப்பு சான்று (எண்கள்.V058911 பதிவு எண்.826796 & V652703 பதிவு எண்.338439) ஆகும். அதன் உண்மைத் தன்மை குறித்து தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் அவர்களால் கடித எண்.ஒமு. எண்.003651/ வி5/ 5/ 2012/ நாள்: 18.03.2012, ஒமு.எண்.003651/ வி5/ 2012/ நாள்: 23.2.2012 மற்றும் ஒமு.002396/ வி1(1)/ 2012/ நாள்: -02.2012-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வயது வரம்பு:

தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் பணிவிதி 14/2016-ன்படி இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமன வயது 30 ஆகும். தமிழ்நாடு அரசுபணி (ப.நி) சட்டம் 2016 விதி 15-ன்கீழ் கருணை நியமனம் செய்யப்படும் இறந்த அரசு ஊழியரின் மகனுக்கு அதிகபட்ச வயதுவரம்பு 35 ஆகும். இவரின் வயது அவரது தந்தை இறக்கும்பொழுது 25 வருடம், 07 மாதம், 14 நாட்கள் ஆகும்.

திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் மிகவும் பிற்பகுத்தப்பட்ட வகுப்பினராவார்.

| | |
|---|---|
| இவரது பிறந்த நாள் | : 22.08.1983 |
| இவரது தந்தை இறந்த நாள் | : 04.04.2009 |
| 04.04.2009 அன்று இவரது வயது | : 25வ - 07மா - 14 நாள் |

த.நா.அ.ப. (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ன்படி விதி 15 விளக்கம் 1ல் உள்ள அறிவுரைகளுக்கு உட்பட்டு இவரது வயது உள்ளபடியால் இவருக்கு வயது வரம்பை தளர்த்தி அரசின் ஆணை பெறும் வினா எழவில்லை.

இவரது தாய்மொழி தமிழ் ஆகும். இவருக்கு எதிரே ஒழுங்கு நடவடிக்கைகளோ, குற்றுச்சாட்டுக்களோ நிலுவையில்லை. இவரது பணி மனம் நிறைவு தரும் வகையில் உள்ளது. இவர் 20.08.2018-ல் மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடல்தகுதிச் சான்றினை சமர்ப்பித்துள்ளார்.

பார்வை எண்.8ல் காணும் துணை இயக்குநர்/செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட கருத்துருவினை நன்கு ஆய்வு செய்ததின் அடிப்படையிலும், திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் அவர்கள் பார்வை எண்.3ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் பார்வை எண்.6ல் காணும் அரசாணையின் வழிகாட்டுதலின்படி, அவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 23.08.2018 பிற்பகல் முதல் பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன், முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவருக்கு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், இவருக்கு ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மேலும் திரு,கே.சுகேஷ், இளநிலை உதவியாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்-2016)-இல் உள்ள பிரிவில் 28(1)ன்படி விதியின்கீழ் இவர் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 23.08.2018 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இவர் தகுதிகாண் பருவத்தினை 23.08.2018 பிற்பகல் முதல் தொடங்கி இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தினை மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும்.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்துகொண்டு தேர்ச்சி பெறவேண்டும்.

(ஒப்பம்). . . . . . . . . . 25.10.2021
கண்காணிப்புப்பொறியாளர் / இயக்குநர்,
பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம்,
திருச்சிராப்பள்ளி —— 620 020.

பெறுநர்:
திரு.கே.சுகேஷ், இளநிலை உதவியாளர்,
வழி: துணை இயக்குநர்/செயற் பொறியாளர்,
பொ.ப.ப.பயிற்சி நிலையம், சென்னை மண்டலம், சென்னை.

நகல்: முதன்மை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) & தலைமைப்பொறியாளர் (க), பொபது. சென்னை மண்டலம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-09 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-09 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: செயற்பொறியாளர்/துணை இயக்குநர், பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை மண்டலம், சென்னை அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. தனியரின் பணிவரன்முறை தொடர்பான சான்றிதழ்கள்/ சான்றாவணங்கள் (அசல்) மற்றும் பணிப்பதிவேடு ஆகியவற்றை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை வழங்குமாறும், இவ்வாணையினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதியுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உபரிநகல்:1 எண்.

25/10/2021
கண்காணிப்புப் பொறியாளர் / இயக்குநர்
பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம்
திருச்சிராப்பள்ளி - 620 020.